**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்**
**ஆத்தூர்**
**------**
**அசல் வழக்கு எண்.47/2021**

**2026 ஆம்** வருடம் பிப்ரவரி மாதம் 10 ஆம் நாள் பிரதிவாதி தரப்பு சாட்சியான பி.வா.சா.1-இன் வாக்குமூலம் 1873ம் வருடத்திய 10வது விதியின் படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முருகேசன் | ஜாதி | : | |
| த.பெ | : | வெள்ளைச்சாமி | தொழில் | : | வயது முதிர்வின் காரணமாக வேலைக்கு செல்லவில்லை |
| கிராமம் | : | ஆத்தூர் | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 91/2026 |
| தேதி | : | 10.02.2026 | | | |

வாதி தரப்பு குறுக்கு **விசாரணை தொடர்ச்சி**

உங்கள் தம்பி 1993 சமரச உடன்படிக்கைப்படி ரூ.10,000/- ஐ உங்களுக்கு தரவில்லை என்று கூறிகிறீர்கள் என்றால் சரிதான். மேற்சொன்ன தொகை ரூ.10,000/- கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினீர்கள் என்றால் இல்லை நேரடியாக நான் கேட்டு எனக்கும், அவருக்கும் தகராறு ஏற்பட்டது. அந்த ரூ.10,000/- ஐ கேட்டு 3 ஆண்டுகளுக்குள் நீங்கள் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். உங்கள் தம்பி 1993 சமரச உடன்படிக்கைப்படி ரூ.10,000/- ஐ உங்களிடம் தந்துவிட்டார் என்றும், நீங்கள் சகோதரர் என்பதால் உங்களிடம் அது குறித்து எழுதி வாங்கிக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. உங்களிடம் காட்டப்படும் வா.சா.ஆ.18 ஆவணத்தை நீங்களும், உங்கள் சகோதரரும், உங்கள் தகப்பனார் ஆகிய 3 பேரும் சேர்ந்து இந்த தாவா சொத்தை சோழவந்தான் கோ ஆப்பரேடிவ் லேண்டு மாக்கேஜ் பேங்க் லிமிடெட் க்கு எழுதி அடமானம் வைத்துள்ளீர்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.18 ல் உள்ள கையொப்பம் உங்களுடையது என்றால் சரிதான்.

வா.சா.ஆ.18 ஆவணத்தை எழுதிக்கொடுக்கும்போது, தாவா சொத்தை பொறுத்து 3 பேருக்கும் உரிமையுள்ளதால் தான் 3 பேரும் சேர்ந்து எழுதிக்கொடுத்துள்ளீர்கள் என்றால் நான் ஜாமின் கையெழுத்து தான் செய்தேன். உங்களிடம் காட்டப்படும் வா.சா.ஆ.19 ஆவணமானது நீங்கள் உங்கள் தகப்பனாருக்கு தாவா சொத்தை பொறுத்து எழுதிக்கொடுத்த சிறப்பு அதிகார பத்திரம் என்றால் சரிதான். வா.சா.ஆ.19 ஆவணத்தின் முதல் பக்கத்தில் 10 வது வரியில் உங்கள் தகப்பனாருக்கும், உங்கள் தம்பிக்கும், உங்களுக்கும் சொந்தமான சொத்தை விற்பதாக

எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.19 ல் உள்ள கையொப்பம் உங்களுடையது தான் என்றால் சரிதான். உங்களிடம் காட்டப்படும் வா.சா.ஆ.19 ல் உங்களது முகவரியாக திருத்தணி முகவரியை குறிப்பிட்டுள்ளீர்கள் என்றால் சரிதான். நான் திருத்தணியில் வேலை செய்வதால் ஆத்தூரில் வந்து அதிகார ஆவணம் எழுதிக்கொடுக்க முடியாது என்று நான் கூறியுள்ளேன். வா.சா.ஆ.19 ஆவணத்தை உங்களுக்கும், உங்கள் தம்பிக்கும், உங்கள் தகப்பனாருக்கும் பாத்தியப்பட்ட சொத்தை விற்பதற்காக தான் வா.சா.ஆ.19 ஐ எழுதிக்கொடுத்துள்ளீர்கள் என்றால் சரிதான்.

வா.சா.ஆ.19 ல் உள்ள சொத்து விபரமும், இந்த வழக்கு சொத்தில் உள்ள சொத்து விபரமும் ஒன்று தான் என்றால் சரிதான். உங்கள் எதிர்வழக்குரையில் 6 வது பத்தியில் உங்கள் தம்பி கார்த்திகைநாதனுக்கு மின்சார வாரியத்தில் நஷ்ட ஈடு வழங்கியதை தெரிந்துகொண்டு நீங்கள் மதுரை உயர்நீதிமன்றத்தில் ஆட்சேபணை செய்து மனு தாக்கல் செய்துள்ளதாக கூறியுள்ளீர்கள் என்றால் நான் மின்சார வாரியத்தில் தான் ஆட்சேபணை செய்தேன். நீதிமன்றத்தில் ஆட்சேபணை செய்யவில்லை. என் தம்பி தான் உயர்நீதிமன்றத்திற்கு சென்றார். உங்களிடம் காட்டப்படும் வா.சா.ஆ.9, வா.சா.ஆ.10, வா.சா.ஆ.11, வா.சா.ஆ.13 மற்றும் வா.சா.ஆ.15 ஆவணங்கள் உங்கள் தம்பி மரம் வெட்டுவதற்கு வாங்கிய உத்தரவு சம்மந்தமான ஆவணங்கள் என்றால் சரிதான். மேற்சொன்ன ஆவணங்கள் வாயிலாகவும், நீதிமன்ற சாட்சி-1 வாயிலாகவும் தாவா சொத்தின் வடபுறத்தில் உங்கள் தம்பி கார்திகைநாதன் தான் அனுபவம் செய்து வந்தார் என்று தெரியவரும் என்றால் சரியல்ல. உங்கள் தம்பி வனத்துறை அதிகாரியாக இருந்தாலும் அவர் ஓய்வு பெற்று பல ஆண்டுகளுக்கு பிறகு தான் பெறப்பட்ட ஆவணங்கள் என்றால் நான் என் தம்பி வனத்துறை அதிகாரியாக இருந்ததால் ஆவணத்தை பெற்றார் என்று கூறவில்லை.

நீங்கள் சொல்வது போல் உங்கள் தம்பி அவருடைய அதிகாரத்தை பயன்படுத்தி ஆவணங்களை பெற்றிருந்தால் அந்த ஆவணங்கள் செல்லாது என்று நடவடிக்கை எடுத்திருப்பீர்கள் என்றும், மேற்சொன்ன ஆவணங்கள் மூலம் உங்கள் தம்பி தான் தாவா சொத்தின் வடபுறம் அனுபவம் செய்து வருகிறார் என்று தெரியவருகிறது என்றால் சரியல்ல. இந்த வழக்கு சொத்து சம்மந்தமாக நில அபகரிப்பு வழக்கை என் தம்பி மீது திண்டுக்கல் நீதித்துறை நடுவர் எண்.2 ல் தனியாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor